ISSN 0975 - 6973
Volume - 9 November - 2017

# FACET 2K17
# ANNUAL JOURNAL OF RESEARCH

## RESEARCH DEPARTMENTS
( Commerce, Economics, English & Tamil )

## FATIMA COLLEGE (Autonomous)
( College with potential for Excellence)
(Re-Accredited with 'A' Grade by NAAC )
National Level 27th Rank-NIRF 2017
Mary Land, Madurai - 18.



# Contents


| S.No | | Page No |
|---|---|---|
| 12. | PHASE OF PATRIARCHY IN CHIKA UNIGWE'S *ON BLACK SISTERS' STREET* AND SEFI ATTA'S *EVERYTHING GOOD WILL COME*<br>**DR.G.PRIYA & MARIYA STEPHY.K** | 163 |
| 13. | TRAUMA AND RECOVERY IN SHYAM SELVADURAI'S *FUNNY BOY* AND NIROMI DE SOYZA'S *TAMIL TIGRESS*<br>**DR.S.SAIRA BANU & SNEHA GEORGE** | 173 |
| 14. | HELON HABILA'S *OIL ON WATER* AND TANURE OJAIDE'S *THE ACTIVIST* A STUDY OF ECO-IMPERIALISM<br>**Dr.MARY MAGDALENE & SELVA JEEVA.M** | 183 |
| 15. | RECLAIMING IDENTITY THROUGH RECONNECTION WITH NATURE IN LINDA HOGAN'S *POWER* AND *SOLAR STORMS*<br>**Dr.A.ROSELIN MARY & VIJAYA VASUKI.S** | 193 |
| 16. | FINDING THE LOST RHYTHM OF LIFE-A QUEST FOR IDENTITY IN SHAILA ABDULLAH'S *SAFFRON DREAMS* AND NAFISA HAJI'S *THE WRITING ON MY FOREHEAD*<br>**DR.S.SAIRA BANU & SINTHIYA.B** | 205 |
| 17. | DISPLACEMENT AND BELONGING IN *THE SECRET RIVER* AND *THE LIEUTENANT* BY KATE GRENVILLE<br>**Dr.S.SAIRA BANU & SHENSHIYA J.A DHAS** | 215 |
| 18. | DAVID KLASS'S THE CARETAKER TRILOGY: *FIRESTORM, WHIRLWIND AND TIMELOCK* : A STUDY OF ECO-TERRORISM<br>**Dr.MARY MAGDALENE & MERCY.S** | 223 |
| 19. | SYMBOLIC INTERACTIONISM IN THE SELECT NOVELS OF NADIA HASHIMI<br>**Dr.S.J.KALA & PRIYADHARSHINI.K** | 231 |
| 20. | திலகவதி நாவல்களில் பெண்ணியச் சிந்தனைகள்<br>**முனைவர் சி. சொர்ணமாலா & சே. மெர்லின் மேரி** | 241 |
| 21. | ஐங்குறுநூற்றில் உயிரியல்<br>**முனைவர் க. லதா & மு. கற்பகவள்ளி** | 253 |
| 22. | அகப்பாடல்களில் செலவழுங்கலும் செலவழுங்குவித்தலும்<br>**முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி & ர. சங்கீதா** | 267 |
| 23. | பரிபாடலில் கலைகள்<br>**முனைவர் நா. ரேணுகா & சி. சத்யா** | 279 |

# பரிபாடலில் கலைகள்

நெறியாளர்
முனைவர் **நா.ரேணுகா**
உதவிப் பேராசிரியர்
பாத்திமா கல்லூரி, மதுரை

**ஆய்வாளர்**
**சி.சத்யா**

முன்னுரை

மனிதன் இயற்கையோடு வாழ்ந்த காலத்தில் தன்னுடைய உணர்வுகளையும் அனுபவங்களையும் வெளிப்படுத்தினான். இவ்வெளிப்பாடு முருகியலோடு அமைகின்ற போது கலையாகக் காட்சியளித்தது. கலைகள் மனித நாகரிகத்தின் பண்பாடாக விளங்கின. கலைகளைப் பறைசாற்றும் சான்றுகள் பல இருப்பினும் சங்க காலத்துக் கலைகளை அறிய உதவுவது சங்க இலக்கியமே ஆகும். இதனுள் பரிபாடலில் காணலாகும் நுண்கலைகள் பற்றியும் இதன் வழியாக அறியப்படும் பண்பாட்டையும் இவ்வியல் ஆராய்கிறது.

**கலை**

கலை கருத்தின் உறைவிடமாகவும், அழகின் பிறப்பிடமாகவும் இன்பத்தின் ஊற்றாகவும் கவர்ச்சியின் நிறைவாகவும் மகிழ்ச்சியின் மாட்சியாகவும் விளங்குகிறது. கலை, அழகு, சுவை, பயன் என்னும் செயல் திறன் கூறுகளைக் கொண்டது. கலை மனித உணர்வை வெளியிடுவதுடன் பிறருக்கும் அவ்வுணர்வுவை ஊட்டும் பெருமையுடையது. கலையின் சிறப்பும் இதுவே ஆகும்.

"கலை என்பது மக்களது வாழ்வியலை, பண்பாட்டை, நாகரிகத்தை எடுத்துக்காட்டும் கண்ணாடி. மக்கள் வாழ, வளரச் சமுதாய நீதிகளையும் அறத் தத்துவங்களையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டிட கலையைப் போல் வேறு சாதனம் இல்லை"

என்ற டி.வி. நாராயணசாமியின் கூற்றும்,

"மனிதனது உள்ளத்தை தன்வயமாக்கி நிரம்பி அவ்வளவோடு நில்லாமல் வெளிப்படும் ஆற்றலே கலை என்கிறோம்"

என்ற மா.இராசமாணிக்கனார் வரையறையும் மேற்கூறிய கருத்தை உறுதிப்படுகின்றன.

**நுண்கலைகள்**

மனித நாகரிகத்தின் பண்பாடாக விளங்குவது நுண்கலை ஆகும். இத்தகு கலைகள் மக்களின் வாழ்வியலை, பண்பாட்டை, நாகரிகத்தைக் காட்டுகின்றன. மேலும் மனிதனுக்கு மன அமைதியையும், நிறைமனத்தையும் அளிக்கின்றன. கவிதைக்கலை, கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை, நாடகக்கலை, நடனக்கலை என்பன நுண்கலைகள் ஆகும்.